தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 24
இதழ் 12
ஏப்ரல் 2023

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்







## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற

# சர்வதேச மகளிர் தின விழா



திருமதி. **பெ. அமுதா,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலாகம்,
சென்னை – 600 009

## மகளிர் தின வாழ்த்து

**எனதருமை சகோதரிகளே..**

உங்கள் அனைவருக்கும் எனது மகளிர் தின வாழ்த்துகள்.

இன்றைய பெண்கள் உலகத்தையே ஆளும் திறன் பெற்றவர்களாக உள்ளனர். குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதனைகளை படைத்து வருகின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். பெண்களுக்குரிய உரிமைக்கான போராட்டத்தை வென்ற தினமான மார்ச் 8 உண்மையிலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது தான். ஏனெனில் 100 ஆண்டுகளுக்கு முன்னரே பெண்கள் தங்களுக்கான உரிமைகளை கேட்டு போராடினர். அன்றைய அதிகார அரசுகள் அவர்களின் போராட்டத்திற்கு பல்வேறு தடைகளை விதித்தாலும், அவற்றைத் தகர்த்து, சிறிதும் அயராமல் தங்களின் போராட்டத்தை உறுதியுடன் மேற்கொண்டு, வெற்றி பெற்றதன் விளைவாக இன்றைய தினம் பெண்களுக்கான உரிமைத் தினமாக மார்ச் 8 என்ற ஒரு தினம் நமக்கு கிடைத்துள்ளது.

மக்கள் நலம் நாடும் தமிழ்நாடு அரசு, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் பொருளாதார சுய சார்பிற்காகவும் பல்வேறு திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவி குழுக்களின் வளர்ச்சிக்காகவும் ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசின் திட்டங்களை சுய உதவிக் குழுவினர் அனைவரும் நல்ல முறையில் பயன்படுத்தி தங்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்திக் கொள்வதுடன், இயக்கத்தின் வெற்றிக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும். எவ்வளவு தடைகள் வந்தாலும் அவற்றை தகர்த்து உங்களின் பாதையில் நீங்கள் பயணிக்க வேண்டும். உங்களுக்கு அனைத்து வகையிலும் அரசும், மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் என்றும் துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை”

என்ற குறள் நெறியில் கூறியதுபோல், ஊக்கத்துடன் இருப்பவர்களைத் தேடி உயர்வு செல்வதைப் போல் உங்களின் ஊக்கம்தான் உங்களுக்குப் பெருமை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கை நிறைந்தவர்களாக, சுயமாரியாதை மிக்கவர்களாக, திறன் பெற்றவர்களாக, பொறுமை மிகுந்தவர்களாக, சமுதாய பொறுப்பு நிறைந்தவர்களாக, தவறுகளை தட்டிக் கேட்கும் அறச்சீற்றம் கொண்டவர்களாக, ஒற்றுமை குணத்துடன், மகிழ்ச்சி நிறைந்தவர்களாக பெண்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு எதிரான தடைகளைத் தகர்த்து முன்னேற முடியும்.

“நீங்கள் பெண் குழந்தைகளை எப்படி பொறுப்பாக வளர்க்கிறீர்களோ அதே போல் ஆண் குழந்தைகளையும் பொறுப்பாக வளர்க்க வேண்டும். இந்த சமுதாயத்தில் பெண்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால் அது ஆண்கள் கையில் உள்ளது. எனவே ஆண் குழந்தைகளைப் பொறுப்பாக வளர்க்க வேண்டும்” என்பதை அனைத்துப் பெண்களும் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் கொண்டாடப்படும் மகளிர் தினம் பல மகளிரின் முயற்சியால் வந்தது என்பதை நீங்கள் மறக்கக் கூடாது என்று கூறிக் கொண்டு, சுய உதவிக் குழு மகளிரின் தோழியாக, முற்றம் இதழ் வாயிலாக மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

**(பெ. அமுதா)**

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



## அன்புள்ள சகோதரிகளே,

ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்து வருபவர்கள் பெண்கள். ஒரு பெண் முன்னேற்றம் அடையும் போது தான் மட்டுமே பயன் பெறாமல், அந்தப் பெண்ணின் குடும்பமும் சேர்ந்தே பயனடையும். இன்றைய காலகட்டத்தில் பெண் என்பவள் முக்கியத்துவம் வாய்ந்தவளாகக் கருதப்படுகிறாள். தன் குடும்பம், தன் மகிழ்ச்சி என இல்லாமல், தடைகளைத் தகர்த்து தன்னலமற்று செயல்படும் வலிமை கொண்டவர்கள் பெண்கள்.

மகளிர் மேம்பாட்டிற்காக துவக்கப்பட்ட நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், "நன்றே செய் – அதுவும் இன்றே செய்" என்னும் முதுமொழிக்கேற்ப தனது துணை அமைப்புகளான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்றவற்றின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கும், இளைஞர்களுக்கும் திறன் வளர்ப்பு பயிற்சிகளையும், நிதி இணைப்புகளையும் வழங்கி, தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றல் மேம்பாட்டை அதிகரித்து, சுய உதவி குழு இயக்கத்தை முன்னெடுத்து செல்வதில் தன்னை அர்ப்பணித்து கொண்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் நமது சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், அரசின் பல்வேறு திட்டங்களில் சுய உதவிக் குழுவினரையும் பங்கு பெறச் செய்து அவர்களுக்கு ஊக்கமும், அங்கீகாரமும் பெற்றுத் தருவதில் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

இவைகள் மட்டுமின்றி, சமீபத்தில் நமது இயக்கத்தின் சார்பில் சென்னையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தனது உரையில், "தான் ஆய்வுக்குச் செல்லும் மாவட்டங்களில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படும் பள்ளிக்குச் சென்று மாணவர்களுடன் காலை உணவு சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன்" என்று குறிப்பிட்டதுடன்,

"தன்னைக் காண வருபவர்கள் தனக்கு பரிசாக அளித்த சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வைக்க தனது வீட்டில் இடமின்றி, தனது தந்தையாரின் வீட்டிற்கும் அவற்றை அனுப்பி வைத்துள்ளதாக" குறிப்பிட்டதும், நமது அரசின் திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்லும் தூதுவர்களாக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும்" எனவும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளது சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது.

தொடர்ந்து வரும் துன்பங்களை எதிர்த்து நிற்கும் மனம் தளராதவர்கள், அத்துன்பத்திற்கே துன்பம் தருவார்கள் எனக் கூறும்,

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

என்ற குறள் வரிகளுக்கு ஏற்ப, தங்களுக்கு வரும் இடையூறுகளையும், தடைகளையும் தகர்த்து முன்னேற்றப் பாதையில் வெற்றி நடைபோட்டு வரும் சுய உதவிக் குழு மகளிருக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், அதன் துணை அமைப்புகளும் என்றும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம்.

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தர தொடர்ந்து செயல்பட்டு வரும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

பெண்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களின் திறன்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளவும், வறுமையை ஒழிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டதுதான் மகளிர் சுய உதவிக் குழு அமைப்பு.

பெண்களின் ஒற்றுமையை பறைசாற்றும் சுய உதவிக் குழு இயக்கமானது இன்று மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு காரணம் உங்களின் தன்னலமற்ற செயல்பாடுகளே. தமக்கு ஏற்பட்ட தடைகளைத் தகர்த்தெறிந்து, எதிர்ப்புகளை சமாளித்து, எதையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு இன்று அனைத்துத் தரப்பினரின் பாராட்டுதலுக்கும் உரியவர்களாக நம் சுய உதவிக் குழுக்களின் மகளிர் மிளிர்கின்றனர்.

குழுவாக இணைந்து செயல்பட்டதன் வாயிலாக சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரத்தினை பெற்றுள்ள நம் சுய உதவிக் குழு பெண்கள், தங்களின் உரிமைகளுக்காகவும், சமுதாய நலனைக் கருத்தில் கொண்டும் பல்வேறு தளங்களில் தங்களின் செயல்பாடுகளை சிறப்புற செயவதில் முன்னத்தி ஏராக என்றும் முன்நிற்கின்றனர். உங்களின் செயல்பாடுகளுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் நம் தமிழ்நாடு அரசும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஊரக மற்றும் நகர்ப்புரங்களில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்குதல், பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கி வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல், சுய தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்குதல், உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், இயற்கை வேளாண் பொருட்களை விளைவிப்பதற்கும், மாடித் தோட்டங்கள் அமைப்பதற்கும் பயிற்சிகள் வழங்குதல் போன்றவை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனை அனைத்து மகளிர் சுய உதவிக் குழுவினரும் ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கி வருவது மிகவும் சிறப்பிற்குரியது.

நீங்கள் பெற்றுள்ள வெற்றி மிகப் பெரியதாக இருப்பினும். உங்களின் பயணம் மேலும் தொடர வேண்டும். உங்களின் செயல் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். சுய உதவிக் குழு மகளிர் புதிய வரலாறு படைப்பவர்கள் என்று மற்றவர்கள் பாராட்ட வேண்டும். வறுமை நீங்கி, வளமை பெருக வேண்டும். மகளிர் நலம் பேண வேண்டும். இவை யாவும் நிறைவேற உங்களின் வெற்றிப் பயணம் மேலும் தொடர வேண்டும். உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்**

பகைவர், அயலோர், நண்பர் எனப் பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.

# உள்ளே...


| | |
|---|---|
| சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் | 08 |
| பெண் காவல் துறையினருக்கு மகளிர் தின வாழ்த்துகள் | 09 |
| சாரஸ் கண்காட்சி திறப்பு விழா | 19 |
| மாவட்டங்களில் மகளிர் தினக் கொண்டாட்டம் | 20 |
| யானை வளர்ப்பும்... ஆஸ்கார் விருதும்... | 23 |
| துப்பட்டா போடுங்க தோழி | 29 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
விலை ரூ. 20/– • மலர் 24 • இதழ் 12 • ஏப்ரல் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **ஜெ.இ. பத்மஜா ,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல்இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல்இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,**கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்',**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# வளர்ச்சிக்கு தேவை நம்பிக்கை

அன்புள்ள வாசகர்களுக்கு,

பள்ளி இறுதியாண்டு மாணவர்கள் தேர்வு எழுதி கொண்டிருக்கும் நேரம் இது. பல பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் உறக்கத்தையும் நேரத்தையும் தியாகம் செய்து, பிள்ளைகள் தேர்வு எழுதுவதற்கு பல்வேறு வகையில் உதவி செய்து கொண்டிருப்பீர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. காரணம், குடும்பங்களில் பொறுப்பு மிக்க பெற்றோர்களுக்கு இது ஒரு கடமையாகும். அதேபோன்று, மகளிர் குழுக்களில் உள்ள உறுப்பினர்களுக்கு, தங்களின் குழு வளர்ச்சிக்கென பல பொறுப்புகள் உள்ளன.

ஏப்ரல் மாதம் புதிய நிதி ஆண்டு தொடங்கி விட்டது. அனைத்து குழுக்களும் சென்ற நிதி ஆண்டிற்கான கணக்குகளை தணிக்கை செய்து, நிதி நிலை அறிக்கை தயார் செய்து, உறுப்பினர்களின் ஒப்புதல் பெற வேண்டியது முக்கிய கடமையாகும். இவ்வாறு குழு கணக்குகள் வெளிப்படையாக இருந்தால் மட்டுமே உறுப்பினர்களுக்கு குழுவின் மீது நம்பகத்தன்மை ஏற்படும். மகளிர் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று பெண்களிடையே நம்பிக்கையை கட்டி எழுப்புவதாகும். காரணம், இரண்டாயிரம் ஆண்டுகளாக பெண்கள் விரக்தியான நிலையில் இருப்பதால் சந்தேகங்களோடும், நம்பிக்கையில்லாமலும் வாழ்ந்து வருகின்றனர். எனவே, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெண்களிடையே நம்பிக்கையை வளர்க்க வேண்டியது தலையாய கடமையாகும்.

பெண்களின் உரிமையை காப்பதற்கென சட்டங்களை இயற்றுவது மற்றும் அவர்களின் வளர்ச்சிக்கான சிறப்பு திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதன் மூலம் பெண்களிடையே அரசு நம்பிக்கை உருவாக்கி வருகிறது. தொடர் நிதி வசதிகளை பெறுவதன் மூலமும், சுய தொழில்களை செய்து வருமானத்தை பெருக்குவதன் மூலமும், கூடி பேசி பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு குழுக்களாக இணைந்து செயல்படுவதன் மூலமும் பெண்களிடையே நம்பிக்கை உருவாகிக் கொண்டு வருகிறது. அரசு ஒவ்வொரு நிதி ஆண்டும் வரவு–செலவிற்கான நிதி அறிக்கையை தாக்கல் செய்வது போன்று, குழுக்களும் தங்கள் குழுக்களுக்கு இந்த புதிய நிதி ஆண்டில் வரவு–செலவிற்கான நிதி அறிக்கையை தாக்கல் செய்வதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் நம்பிக்கையோடு இந்த புதிய நிதியாண்டில் வளர்ச்சியை நோக்கி நடைபோடுவது பொருள் நிறைந்த பயணமாக அமையும்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 06.03.2023 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ''கள ஆய்வில் முதலமைச்சர்'' திட்டத்தின் கீழ் மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் தேனி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சசர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர.சக்கரபாணி, மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.விசாகன், இ.ஆ.ப., சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர்.வி.ஷஜீவனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம்







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 08.03.2023 அன்று சென்னை, எத்திராஜ் மகளிர் கல்லூரியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி மாணவி செல்வி ம.இளம்பிறை அவர்களுக்கு, அறிவியல் ஆர்வம் காரணமாக அடுக்குமாடி குடியிருப்புகளில் மின்தூக்கி பழுதடைவதால் ஏற்படும் இழப்புகளை தடுக்க புதிய கருவியை கண்டுபிடித்து சமுதாயத்திற்கு சிறந்த பங்களிப்பினை நல்கியமைக்காக 2022-23ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தை விருதினை வழங்கி வாழ்த்தினார். உடன் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், மாண்புமிகு இந்த சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பரந்தாமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., சமூக நலத்துறை இயக்குநர் திருமதி. த.ரத்னா, இ.ஆ.ப., பேராசிரியர் பர்வீன் சுல்தானா, எத்திராஜ் மகளிர் கல்லூரியின் அறங்காவலத் தலைவர் திரு. வி.எம்.முரளிதரன், கல்லூரி முதல்வர் டாக்டர் டி.பி.உஷாராணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், முதுமலை யானைகள் வளர்ப்பு முகாமில் எடுக்கப்பட்ட ஆஸ்கார் விருது பெற்ற ``The Elephant Whisperers” ஆவணப் படத்தில் இடம் பெற்ற ரகு எனும் யானைக் குட்டியின் பராமரிப்பாளர்களான திரு. பொம்மன், திருமதி. பெல்லி தம்பதியரை வாழ்த்தி பாராட்டு கேடயமும், பொன்னாடையும் அணிவித்து, தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மரு. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முனைவர். வெ.இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் திரு. ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, இ.வ.ப., புலிகள் காப்பக கள இயக்குநர் திரு. து.வெங்கடேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

# பெண் காவல் துறையினருக்கு மகளிர் தின வாழ்த்துகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 08.03.2023 அன்று முகாம் அலுவலகத்தில், உலக மகளிர் தினத்தையொட்டி சந்தித்த காவல் துறை இயக்குநர்கள் முதல் காவலர்கள் வரையிலான பெண் காவல் துறையினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுக்கு மரக் கன்றுகளை வழங்கினார். உடன் காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 08.03.2023 அன்று சென்னை, அண்ணா சாலையில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் பெண் காவலர்களுக்கு மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்து, நினைவுப் பரிசாக புத்தகங்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, சென்னை பெருநகர காவல் ஆணையர் திரு. சங்கர் ஜிவால், இ.கா.ப., மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 08.03.2023 அன்று முகாம் அலுவலகத்தில், உலக மகளிர் தினத்தையொட்டி சந்தித்த முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுக்கு மரக் கன்றுகளை வழங்கினார். உடன் காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, இ.கா.ப., முதலமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு காவல் கண்காணிப்பாளர் திரு. ஆர்.திருநாவுக்கரசு, இ.கா.ப., ஆகியோர் உள்ளனர்.

# மக்கள் நலம் நாடும் அரசின் 2023–2024ஆம் ஆண்டிற்கான

## நிதி நிலை அறிக்கையில் மகளிரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன்தரும் அறிவிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் அரசானது மகளிர் நலனில் பெரிதும் அக்கறைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மக்கள் நலம் நாடும் அரசின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் மகளிரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன் தரும் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.



### பள்ளிக் குழந்தைகளின் பசியைப் போக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

தமிழ்நாட்டில் 1,937 பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 1,48,315 மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றி கல்வியறிவு பெற்றிடவும் எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்' என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தை செயல்படுத்திட, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள 30 ஆயிரத்து 122 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் 18 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







### மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வியில் சேர்ந்த அனைத்து மாணவிகளுக்கும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படுகிறது. தற்போது, ஒவ்வொரு மாதமும் 2.20 இலட்சம் மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். 2021-22 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, உயர்கல்வியில் முதலாம் ஆண்டில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 29 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது, கூடுதலாக 20,477 மாணவியர்கள் சேர்ந்துள்ளனர். பள்ளிப்படிப்பு முடித்த பின் உயர்கல்வியை தொடராத பல மாணவிகள் கூட தற்போது கல்லூரிகளில் சேர்ந்திருப்பது இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும்.

### மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 30,000 கோடி வங்கிக் கடன் இணைப்பு

நாட்டுக்கே முன்னோடியாக, 1989 ஆம் ஆண்டில் தர்மபுரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுய உதவி குழு இயக்கம் ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, இன்று ஒரு மகத்தான மக்கள் இயக்கமாகத் திகழ்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களின் திறன் மேம்பாட்டிற்கும் வாழ்வாதார வளர்ச்சிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. இவ்வாண்டு, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, இதுவரை, சுமார் 24,712 கோடி ரூபாய்க்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில், 30,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.





## பெண்களுக்கென சிறப்பு 'புத்தொழில் இயக்கம்'

பெண் தொழில் முனைவோர்கள், தேவையான கடன்களை உரிய நேரத்தில் பெறுவதிலும், பொருட்களை சந்தைப்படுத்துவதிலும், தொடர்ந்து இடர்பாடுகளை சந்திக்கின்றனர். இச்சவால்களை எதிர்கொள்ள, பெண்களுக்கென சிறப்பு 'புத்தொழில் இயக்கம்' ஒன்றை அரசு தொடங்கும். பெண் தொழில்முனைவோர், புத்தொழில்களை தொடங்குவதற்கு அனைத்து வகையிலும் இந்த இயக்கம் உதவும்.

## "காலநிலை மாற்ற வீராங்கனைகள்"

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் மகளிரின் முக்கியப் பங்கை உணர்ந்துள்ள இந்த அரசு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் "காலநிலை மாற்ற வீராங்கனைகள்" என்ற காலநிலை விழிப்புணர்வு திட்டத்தை தொடங்கும். சுற்றுச்சூழல், காலநிலைமாற்றம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதற்காக முதற்கட்டமாக 500 மகளிர் சுய உதவிக் குழுக்கள் இந்த சுற்றுச்சூழல் பற்றிய பரப்புரையை முன்னெடுப்பார்கள். இதற்காக, அவர்களுக்கு 20 கோடி ரூபாய் செலவில் மின் ஆட்டோக்கள் வழங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறைக்கு 1,248 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.





## பெண்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

தொழில்துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. பெண்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தோல் அல்லாத காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. இத்தொழிற்சாலைகள் ஏற்கனவே செய்யாறு, பர்கூர் ஆகிய இடங்களில் செயல்பாட்டில் உள்ளன. திண்டிவனத்தில் 5,400 பெண்களுக்கும், பெரம்பலூரில் 31,600 பெண்களுக்கும் வேலைவாய்ப்புகள் தரக்கூடிய இரண்டு தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று அடிக்கல் நாட்டியுள்ளார். மேலும், இரண்டு புதிய தொழிற்சாலைகள் இராணிப்பேட்டையிலும், கள்ளக்குறிச்சியிலும் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 32,000 பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

## மகளிர் உரிமைத் தொகை

தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படவுள்ளதா நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதத்தில், அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதல் இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் பயன் பெறுவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும். தமிழ்நாட்டு மகளிரின் சமூக பொருளாதார வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடிய இத்திட்டத்திற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 7,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில்

## மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா 08.03.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மாநில அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, குழு நடனம் மற்றும் குழுப் பாடல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

பல்வேறு தடைகளைக் கடந்து, சாதனைகளைப் படைத்து வரும் பெண்களை சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வரும் மகளிர் தினத்தில் அவர்களின் பெருமைகளுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 08.03.2023 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**1989ஆம் ஆண்டு பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு என்ற சட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி சாதனை படைத்தார்**

விழா மேடைக்கு வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களை மகளிர் சுய உதவிக் குழுவினர் பலத்த கரவொலியுடன் வரவேற்றனர். விழாவின் துவக்கமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்.

தொடர்ந்து, சிவகங்கை மாவட்டம் கற்பக விநாயகா சுய உதவிக் குழு மற்றும் தென்காசி மாவட்டம் தமிழ் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த மகளிர் தங்களின் அனுபவம் குறித்து பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்வுகளுக்குப் பின்னர் பெண்களின் கல்வி முன்னேற்றம் மற்றும் பாலின சமத்துவம் குறித்து, திருநர் உரிமை செயல்பாட்டாளரும், எழுத்தாளருமான கிரேஸ் பானு அவர்களும், பெண்களின் முன்னேற்றத்தில் ஆண்களின் பங்கு குறித்து கவிஞர் மனுஷ்ய புத்திரன் அவர்களும், பெண்களின் பொருளாதார முன்னேற்றம் குறித்து மாநில திட்டக் குழுவின் துணைத்தலைவர் முனைவர் ஜெ, ஜெயரஞ்சன் அவர்களும் சிறப்புரையாற்றினர்.






இவைகளைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மை செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரையாற்றினார். இந்நிகழ்வுகளுக்கெல்லாம் முத்தாய்ப்பாக விழா பேருரையாற்றிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது உரையில்,

"சமூகம், அரசியல், பொருளாதாரம், கல்வி போன்ற துறைகளில் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடுவதற்கான உகந்த நாளாக இந்த நாள் உருவெடுத்துள்ளது. இன்றைய தினம் நாம் கொண்டாடி மகிழ்ந்து வரும் மகளிர் தினம், மகளிர் கல்வி, சம வாய்ப்பு, சுதந்திரம், பெண்ணுரிமை, சுய மரியாதை, தன்னம்பிக்கை, சுயசார்பு, வேலைவாய்ப்பு போன்றவற்றில் தங்களின் உரிமைகளைப் போராடி வென்றெடுத்த தினமாகும். பெண்களின் மன வலிமையையும், ஆளுமைத் திறனையும், எண்ணியதை நிறைவேற்றும் ஊக்கத்தையும் காணும் பொழுது உள்ளபடியே நான் பெருமிதம் கொள்கிறேன்.

நீதிக்கட்சி காலத்திலேயே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டதை நீங்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். பெண்ணுரிமை, மகளிர் மேம்பாடு ஆகியவற்றிற்காக அயராது பாடுபட்ட தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கனவை மெய்ப்பிக்கும் வகையில், 1989ஆம் ஆண்டு பெண்களுக்கும் சொத்தில் சம பங்கு என்ற சட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி சாதனை படைத்தார்.

தொடர்ந்து, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் அவர்களின் நினைவாக ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம், கைம்பெண்களின் மறுமணத்தை ஊக்குவிக்கும் விதமாக கைம்பெண் மறுமண நிதி உதவித் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியதுடன், 1973ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முறையாக காவல் துறையில் மகளிரை பணி அமர்த்தி அழகு பார்த்தவரும் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்பதை இங்கு நினைவு கூர்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் இந்தியாவிலேயே முதன் முறையாக 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கமானது இன்று தேசிய அளவில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றதன் மூலம் மகளிர் சுய சார்பு பெற்றவர்களாகவும், தனித்தன்மை உடையவர்களாகவும் மிளிர வைத்தவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.









எந்த மாநிலத்திற்கு நான் ஆய்விற்குச் சென்றாலும், மகளிர் திட்டங்களை செயல்படுத்துவதில் நமது மாநிலம்தான் முதலிடத்தில் உள்ளது என்பதை பெருமையுடன் நினைவு கூர்கிறேன். நமது திராவிட மாடல் அரசின் குறிக்கோளே பெண்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதும் மற்றும் அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்து, மகளிர் வாழ்வில் புரட்சியை ஏற்படுத்துவதாகும்.

நம் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் இலட்சக்கணக்கான சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள பல இலட்சம் மகளிரும் சாதனைப் பெண்கள்தான், போற்றுதலுக்கு உரியவர்கள்தான் என்பதை பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறேன்.

திராவிட மாடல் அரசின் முன்னத்தி ஏராக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழிவந்த உங்களில் ஒருவரான நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் வளர்ச்சிக்காக நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

பெண்களின் நலத்தையும், அவர்தம் வளத்தையும் முன்னேற்றச் செய்திட செயல்பட்டு வரும் மக்கள் நலம் நாடும் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான உங்களின் அரசானது,

- உள்ளாட்சியில் மகளிரை அதிகாரம் மிக்கவர்களாக உருவாக்கிட உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களில் 50 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்கியது,
- பணிக்குச் செல்லும் மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவரின் சிரமங்களைக் களையும் வகையில் அவர்களுக்கு நகரப் பேருந்துகளில் இலவச பயணச் சலுகை தந்தது,
- மகளிர் சுய உதவிக் குழுவினரை காத்திட, கூட்டுறவு சங்கங்கள் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.2,674 கோடி கடனை தள்ளுபடி செய்தது,
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம் ஆகியவற்றில் மகளிர் சுய உதவிக் குழு மகளிரை ஈடுபடுத்தி, அவர்களின் தன்னலமற்ற சேவைக்கு அங்கீகாரம் பெற்றுத் தந்தது,
- காலை உணவுத் திட்டத்தினால் அதிகம் பயன் பெற்றது நான் தான் என்பதை உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியென்றால், எந்த மாவட்டத்திற்கு நான் ஆய்விற்குச் சென்றாலும் அங்குள்ள பள்ளிக் குழந்தைகளுடன் காலை உணவு சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளேன்.
- மகளிர் மற்றும் குழந்தைகளின் ஊட்டச் சத்தினை உறுதி செய்திட முருங்கை மற்றும் பப்பாளி மரங்கள் அடங்கிய 3.8 இலட்சம் ஊட்டச் சத்து தோட்டங்களை அமைத்து சாதனை புரிந்தது,
- சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட விற்பனையகம் அமைத்தது,
- சுய உதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருட்களுக்கு தனி முத்திரை பெற (Branding) நடவடிக்கைகள் மேற்கொண்டது,
- சுய உதவிக் குழுவினரின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திட மின்னணு வர்த்தக தளம் அமைத்துக் கொடுத்தது,
- இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தி, இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத் தந்ததுடன், சுய தொழில் முனைவோராக அவர்களை உருவாக்கியது

போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவது நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான உங்களின் அரசுதான் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைய தினம் இங்கு நடைபெறும் இச்சிறப்புமிகு நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மாநில அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, குழு நடனம் மற்றும்



குழுப் பாடல் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பரிசுகளை வழங்கி, பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நான் என்னைக் காண வருபவர்கள் எனக்கு பரிசுப் பொருட்களை தருவதாக இருந்தால் அந்தப் பொருட்கள் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களாக இருக்க வேண்டும் என்று அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளதை இங்கு நான் நினைவுப்படுத்துகிறேன். இதனால் எனது வீடு முழுவதும் உங்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள் நிறைந்து உள்ளன. எனது வீட்டில் இடமில்லாமல் எனது தந்தையின் வீட்டிற்கும் அப்பொருட்களை நான் வழங்கி வருகிறேன்.

இவைகள் மட்டுமன்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்றுமே மகளிரின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை நின்று, ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்திட துணை நிற்பார்கள் என்று நான் உறுதியுடன் கூறிக் கொள்கிறேன். நன்றி வணக்கம்” என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஜெ.இ.பத்மஜா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விழா மேடையில் ஆற்றிய உரைகளில் இருந்து...



திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள்,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

இன்றைய தினம் இங்கு சொல்லப்பட்ட அருமையான கருத்துக்களை இங்கிருந்து கொண்டு சென்று மற்றப் பெண்களுக்கும் நீங்கள் சொல்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அனைவருக்கும் சுதந்திரம் வேண்டும். எனவே நீங்கள் கடைசி வரை சுதந்திரத்தை மனதில் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

எல்லோரும் தன்னம்பிக்கையோடு இருங்கள். தன்னம்பிக்கை தான் நமது மூலதனம். எனவே தன்னம்பிக்கையோடுதான் வாழ வேண்டும். சுயமரியாதையுடன் இருக்க வேண்டும். நம்மை நாம் மதித்தால் தான் மற்றவர்கள் நம்மை மதிப்பார்கள். எனவே நம்மை நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். திறமையைக் கண்டறிய வேண்டும். எல்லோரிடமும் திறமை உள்ளது. எனவே அதைக் கண்டறியுங்கள். அரசாங்கம் வழங்கும் திறன் பற்சிகளில் கலந்து கொண்டு திறனை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.,

உங்களிடம் நிறைய பொறுமை உள்ளது என்பது எனக்குத் தெரியும். நமது ஊர்களில் சொல்வார்கள் ‘ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கணும்’ என்று. நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் பொறுப்பு, சமுதாயத்தில் பொறுப்பு என அனைத்து இடங்களிலும் நமக்குப் பொறுப்பு உள்ளது, பெண் குழந்தைகளை எப்படி பொறுப்பாக வளர்க்கிறீர்களோ அதே போல் ஆண் குழந்தைகளையும் பொறுப்பாக வளர்க்க வேண்டும். இந்த சமுதாயத்தில் பெண்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால் அது ஆண்கள் கையில் உள்ளது. எனவே ஆண் குழந்தைகளைப் பொறுப்பாக வளர்க்க வேண்டும்.

சரியான நேரத்தில் கோபம் வர வேண்டும். அடிக்கடி கோபம் வந்தால் அதற்கு மரியதை இல்லை. எப்போது கோபம் வர வேண்டுமோ அப்போது கோபம் வர வேண்டும். நமக்கு இழைக்கப்படும் கொடுமைகள், நம் மேல் செலுத்தப்படும் வன்முறைகள் மீது நமக்குக் கோபம் வர வேண்டும், நமக்கு வரும் கோபம் நியாயமானதாக இருக்க வேண்டும், பெண்கள் சாதிக்க வேண்டும் என்றால் நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அனைவரும் மகிழ்ச்சியாக சந்தோஷமாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கொடுக்க வேண்டும்,



திருமதி. **ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப.,** அவர்கள்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

மகளிர் நலனில் அக்கறைக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து பெண்களின் வளர்ச்சிக்காக நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஏராளமான சாதனைகளைப் படைத்துள்ளது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் மகளிர் சுய உதவிக் குழுவின் முன்னேற்றத்திற்காக சிறந்த திட்டங்களை செயல்படுத்திட ஆர்வத்துடன் செயல்பட்டு வருகிறார் என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் இந்த நிகழ்வில் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் என்றுமே மகளிரின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்திட துணை நிற்பார்கள் என்று நான் உறுதியுடன் கூறிக் கொள்கிறேன்.



எழுத்தாளர் **கிரேஸ் பானு** அவர்கள்,
திருநர் உரிமை செயல்பாட்டாளர்

"தமிழகத்தில் பெண்கள் பெறும் ஒவ்வொரு கல்விப் பட்டங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. சமூக நீதி அரசியலின் தொடர்ச்சியாக அதன் வளர்ச்சிக்குப் பெண்களுக்கு சொத்துரிமை, இட ஒதுக்கீடு போன்ற பல்வேறு உரிமைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றினார். சமூக நீதிக் கோட்பாடு என்பது யார் யாரெல்லாம் ஆதிக்கத்தால் பாதிக்கப்படுகிறார்களோ அவர்களை பாதுகாக்கக் கூடியதே ஆகும். அந்த வகையில் பெண்களின் முன்னேற்றத்தோடு மட்டுமல்லாமல் திருநங்கைகளுக்கும் நல வாரியம் அமைத்துக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு என்பதை நாங்கள் வரலாற்றில் என்றும் நினைவு கொள்வோம்,

ஆட்சியில் இருந்தாலும், இல்லையென்றாலும், சமூக நீதிக் கோட்பாட்டில் உறுதியாக நின்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களதான் என்பதை நான் என் வாழ்வில் உணர்ந்துள்ளேன். 2014ஆம் ஆண்டு நான் இந்தியாவிலேயே முதல் திருநங்கையாக என் சுயபாலின அடையாளத்தோடு பொறியியல் கல்லூரிக்குச் செல்லும் போது, எனக்கான முதல் வாழ்த்து முரசொலியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடையதுதான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சமூக நீதிக் கோட்பாட்டின் தொடர்ச்சியாக பெண்களோடு சேர்ந்து திருநங்கைகளுக்கும் பேருந்தில் கட்டணமில்லாமல் பயணிக்க ஆணையிட்டதும், 40 வயதைக் கடந்த திருநங்கைகளின் வாழ்வில் அக்கறைக் கொண்டு அவர்களுக்கு மாதம் 1500/- ரூபாய் உதவித் தொகை வழங்க ஆணையிட்டதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சாதனைகளாக நாங்கள் என்றும் நினைவில் கொள்வோம்.



கவிஞர் மனுஷ்ய புத்திரன் அவர்கள்

தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட ஆண்கள் யார் என்று யோசித்து பார்த்ததில் எனக்கு நான்கு ஆண்களின் பெயர் மட்டும்தான் நினைவிற்கு வந்தது. ஒன்று பெரியார் என்ற ஆண், பிறகு அண்ணா என்கிற ஆண், பிறகு கலைஞர் என்கிற ஆண், பிறகு இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் என்கிற ஆண். இந்த நான்கு ஆண்கள்தான் பெண்களின் முன்னேற்றத்திற்கு உரிய செயல்பாடுகளை முன்னெடுத்தனர். பெண்களை அடிமைப்படுத்தியவைகள் ஒவ்வொன்றையும் உடைத்தவர்கள் நான் சொன்ன நான்கு ஆண்கள்தான். இங்கு இந்த அரங்கத்ததில் கூடியிருக்கும் பெண்கள் ஒவ்வொருவரும் வீரப் பெண்கள்தான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் பெண்களின் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தினார். பெண் கல்வி கற்றால் அவள் சார்ந்த குடும்பமே முன்னேறும் என்பதால் பெண்களுக்கு கல்வி அறிவும், படித்தப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டமும் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

அவர்வழி வந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நகரப் பேருந்துகளில் இலவச பயணம், கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு மாதம் 1000/- ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம், துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்றவற்றை செயல்படுத்தி, பெண்களின் முன்னேற்றத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகிறார்,



முனைவர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள்
துணைத்தலைவர், மாநிலத் திட்டக்குழு

திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் பெண்களின் வளர்ச்சிக்கும் சேர்த்துதான் திட்டமிடப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் போட்ட முதல் கையெழுத்து, பெண்களுக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவச பயணம் என்பது தான். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரின் சிந்தனை “எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும், எல்லோரும் முன்னேற வேண்டும்” என்பது மட்டும்தான்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அவற்றுள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களும் ஏராளமாக உள்ளன, சுய உதவிக் குழுப் பெண்கள் கடன் வாங்குவது, அதை முறையாக திருப்பி செலுத்துவது என்பதை மட்டும் செய்யாமல் தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும், இதனால் உங்களின் பொருளாதாரம் மேம்படும்.

இந்திய தொழில் நுட்ப நிறுவனம் வாயிலாக 100 சுய உதவிக் குழுப் பெண்களுக்கு உணவுப் பொருட்களை பதப்படுத்தல், மேம்படுத்துதல், அவற்றை விற்பனை செய்தல் போன்றவற்றில் தேவையான பயிற்சிகளை வழங்கிட அரசு முயற்சி எடுத்துள்ளது, விரைவில் அவை செயல்படுத்தப்படும்.

பெண்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு, பெண்களைத் தாக்கும் கர்ப்பப்பை புற்றுநோயினைத் தடுப்பதற்கான தடுப்பூசி தமிழ்நாட்டில் உள்ள பதின்ம வயதில் உள்ள பெண்களுக்கு போடப்படும் என்று அறிவித்துள்ளது நமது அரசு. இந்தியாவிலேயே இத்திட்டமானது நமது தமிழ்நாட்டில்தான் முதன்முதலில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதையும். வளர்ச்சி என்பது பெண்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதற்காக நமது அரசானது திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்ச் 8

# உலக மகளிர் தினம் 2023

"மங்கையராய் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"



# மகளிர் வாழ்வு வளம் பெற

## மகளிர் நலம் நாடும் நம் அரசானது ஆட்சிப் பொறுப்பேற்றது முதல்...



- 8,23,825 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.44,840 கோடி வங்கிக் கடன்
- ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் 83,360 புதிய சுய உதவிக் குழுக்கள்
- பள்ளி மாணவர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் சுய உதவிக் குழு மகளிரின் பங்கெடுப்பு
- பெண்களின் ஊட்டச்சத்தினை உறுதி செய்திட 10.5 இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, 3.8 இலட்சம் வீடுகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன
- பெண்கள் உயர்கல்விக்கென மாதந்தோறும் ரூ.1,000/- வழங்கும் புதுமைப் பெண் திட்டம்
- இளைஞர் திறன் திருவிழா திட்டம் - 36,626 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி, 16,117 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள்.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 11,176 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பங்களிப்பு
- 5,392 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் - 1,64,128 உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சிகள்











**"முடியுமா நம்மால்"**
**என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம்.**
**"முடித்தே தீருவோம்"**
**என்பது வெற்றிக்கான தொடக்கம்.**

- என்று உரைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து, மகளிர் வாழ்வில் ஏற்றம் பெற செய்தார். அவர்தம் வழி வந்த நமது அரசும், உங்களில் ஒருவனான நானும் துறைதோறும் முத்திரைப் பதிக்கும் அனைத்து மகளிருக்கும் என்றும் துணை நிற்பேன் என்று கூறிக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் இனிய மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

இனிய மகளிர் தின வாழ்த்துகள்

## மு.க.ஸ்டாலின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

செ.ம.தொ.இ/222/வரைகலை/2023

# மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

## தொழில் வளத்தைப் பெருக்கிட இணை மானிய நிதிக்கான அனுமதி ஆணையினை வழங்கினார்

மதுரை கலைஞர் திடலில் 06.02.2023 அன்று நடைபெற்ற நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு, மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஆகிய வட்டாரங்களின் 25 பயனாளர்களுக்கு இணை மானிய நிதிக்கான அனுமதி ஆணையினை வழங்கி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுவினர் தயாரித்த பொருட்களின் விற்பனை அரங்குகளைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின் போது சக்கிமங்கலம் நரிக்குறவர் குழுவினரின் தொழிற்குழு உற்பத்திச் செய்த ஸ்படிக மாலை மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டப் பயனாளர்கள் உற்பத்திச் செய்த சணல் பைகள், தென்னை கொட்டாங்குச்சி கைவினைப் பொருட்கள், மண்பாண்டங்கள் மற்றும் எண்ணெய் உற்பத்தி



ஆகியவற்றின் விவரங்களைக் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.வெங்கடேசன் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் S. அனீஷ் சேகர், இ.ஆ.ப. ஆகியோர் பங்கேற்றனர்.



# சாரஸ் கண்காட்சி திறப்பு விழா



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 05.03.2023 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சாரஸ் - மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியினை தொடங்கி வைத்து, அரங்குகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. வி.செந்தில் பாலாஜி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு. மு.பிரதாப், இ.ஆ.ப., கூடுதல்



ஆட்சியர் (வளர்ச்சி) டாக்டர் பி.அலர்மேல் மங்கை, இ.ஆ.ப., மாநகரட்சி துணை மேயர் திரு. இரா.வெற்றிச்செல்வன், மண்டலக் குழுத் தலைவர் திரு. மீனா லோகு, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி. சுமா ஆகியோர் உள்ளனர்.

# மாவட்டங்களில் மகளிர் தினக் கொண்டாட்டம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் தின விழா 08.03.2023 அன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தில் சுய உதவிக் குழுக்களின் மகளிர் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம், வாடிப்பட்டியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் பள்ளி மாணவியரின் நாட்டியம், சுய உதவிக் குழு மகளிரின் விழிப்புணர்வு நாடகம், கவிதை, நடனம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளில் மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. காளிதாஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.







கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் பகுதியில் பல்வேறு திட்டப் பணிகளை ஆய்வு செய்ய வருகை தந்த கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்களும், கூடுதல் ஆட்சியர் திரு. மதுபாலன், இ.ஆ.ப., அவர்களும் கீரப்பாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினைச் சேர்ந்த சுய உதவிக் குழு மகளிருக்கு மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுடன் கலந்துரையாடினர்.

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் சர்வதேச மகளிர் தினம் தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ரூபன் சங்கர் ராஜ் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின்போது சுய உதவிக் குழுவினர் விற்பனை செய்யும் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் 600 சுய உதவிக் குழு தொழில் முனைவோர் ஒன்றிணைந்து மகளிர் திட்டத்தின் 'மதி' இலட்சினையை உருவாக்கினர்.








தென்காசி மாவட்டத்தில் உலக மகளிர் தினத்தையொட்டி 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு.கோ.குருநாதன் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் உலக மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்தியன் வங்கி சார்பாக வங்கிக் கடனுதவிக்கான காசோலைகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின் போது, கூடுதல் ஆட்சியர் திரு. எச்.எஸ். ஸ்ரீகாந்த், இ.ஆ.ப., இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் திருமதி. கே.சங்கீதா நாயர் மற்றும் பலர் உடன் உள்ளனர்.






நாகப்பட்டினம் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் சார்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி கட்டட கூட்ட அரங்கில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேச்சு போட்டி, பாட்டுப் போட்டி, கவிதை போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட பகுதி அளவிலான கூட்டமைப்பு சார்பில் சர்வதேச மகளிர் தின பேரணியை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். இப்பேரணியில் 500க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பேரணியானது முக்கிய வீதிகள் வழியாக சென்று வாணியம்பாடி இஸ்லாமிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் (ஆண்கள்) விழா மேடையில் நிறைவுற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.





திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் சாழபாக 09.03.2020 அன்று உலக மகளிர் தின விழா திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ.சந்திரா அவர்களின் தலைமையில் பெண்களின் சிறப்பை போற்றும் வகையில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள், கவிதை போட்டி, பட்டி மன்றம் நடனம், நாடகம் போன்ற போட்டிகள் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி சான்றிதழ்களையும் வழங்கினார்.

# மாவட்டங்களில் மகளிர் தினக் கொண்டாட்டம்



சேலம் மாவட்டம்



திண்டுக்கல்



பெரம்பலூர்



தூத்துக்குடி



சிவகங்கை



திருவள்ளூர்



காஞ்சிபுரம்




இராணிப்பேட்டை



# யானை வளர்ப்பும்... ஆஸ்கார் விருதும்...



நீலகிரி மாவட்டம், முதுமலை ஊராட்சி, தேக்குபாடி குக்கிராமத்தில் பெண் யானை பாகன் திருமதி. பெல்லி. இவர் நீலகிரி மாவட்டத்தில் காட்டுநாயகர் இனத்தைச் சேர்ந்தவர். இவர்கள் பல தலைமுறையாக இவர்களது குலத் தொழிலான தேன் எடுத்தல் மற்றும் மீன் பிடித்தலை வாழ்வாதார தொழிலாக செய்து வருகின்றனர். திருமதி. பெல்லியின் கணவர் திரு. பொம்மன் அவர்களும் 40 ஆண்டு காலமாக யானைப் பாகனான வேலை பார்த்து வருகின்றார்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக 2013-14ஆம் ஆண்டு மக்கள் நிலை ஆய்வு கணக்கெடுப்பில் இலக்கு மக்கள் பட்டியலில் ஏழை குடும்பமாக திருமதி. பெல்லியின் குடும்பம் மக்களால் தேர்வு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவர் 2014 முதல் ஸ்ரீ பில்லூர் மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினராக பலகட்ட வாழ்வாதாரப் பயிற்சியில் கலந்து கொண்டார். இவரின் பாரம்பரிய தொழிலை மேம்படுத்தும் பொருட்டு தனது கணவரின் வாழ்வாதாரத்திற்குத் துணையாக இவரும் பெண் யானைப் பாகனாக மாறினார். உடல் நலக் குறைவால் காட்டில் ஆதரவின்றி சுற்றித் திரிந்த யானைக்குட்டி ஒன்று 2017ஆம் ஆண்டு வனத்துறை மூலம் பெல்லி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்குட்டி யானைக்கு ரகு என்று பெயரிட்டு குழந்தையைப் போல வளர்த்து வந்த திருமதி. பெல்லி மற்றும் திரு. பொம்மன் ஆகியோருக்கு யானை மேல் உள்ள அன்பையும் அக்கறையையும் பார்த்து பொது மக்கள் வியந்துள்ளனர். இவருக்கு ஸ்ரீ பில்லூர் மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் உறுதுணையாகவும் இருந்து வந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இவருக்கு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக வாழ்வாதாரக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.



2019 ஆண்டு சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப் பகுதியில் ஆசனூர் வனச்சரகத்தில் தாயை விட்டு தனியே பிரிந்து சோர்வடைந்த நிலையில் வனப்பகுதி சாலையில் சுற்றித் திரிந்த பெண் குட்டி யானையை அதன் தாயிடம் சேர்க்க முடியாத நிலையில் வனத்துறையினரால் அந்தக் குட்டி யானை திருமதி. பெல்லி அவர்களிடம் வளர்ப்புக்காக ஒப்படைக்கப்பட்டது. இக்குட்டி யானைக்கு அம்முக்குட்டி என்ற பெயரிட்டு அதற்கு சிகிச்சை அளித்து, தினமும் நடை பயிற்சி செய்ய வைத்து, நடை பழக்கியதுடன், பால் மற்றும் சத்தான திரவ உணவுகளையும் கொடுத்து, குழந்தையாகவே பாவித்து வளர்த்து வந்தனர். இவர் அம்முக்குட்டி பெண் யானையின் உடல் தேறியதும், முதுமலை வளர்ப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு திரு. பொம்மனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அம்முக்குட்டி என்ற அந்தக் குட்டி யானையின் பெயர் பொம்மி எனப் பெயர் மாற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவரது சிறந்து ஆளுமை திறனையும், யானை வளர்ப்பில் இவருக்கு இருந்த ஈடுபாட்டை அங்கீகரிக்கும் வகையில் நீலகிரி மாவட்டம், உதகை அரசு பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் பெண் சாதனையாளர் திருமதி. பெல்லி அவர்களுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் ஆகியோர் பரிசு மற்றும் சால்வை வழங்கி சிறப்பித்தனர்.



## வணிகம் வளர்க...
## மகளிர் சுய உதவிக் குழுக்களின்
# தரமான தருமபுரி தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## தருமபுரி மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| திருமதி. மீனாட்சி,<br>அன்னபூரணி மகளிர் சுய உதவிக் குழு,<br>சேவடி ஊராட்சி,<br>நல்லம்பள்ளி வட்டாரம், தருமபுரி மாவட்டம்.<br>கைபேசி : 96009 17131 | சணல் பைகள் |  |
| திருமதி. சுந்தரமதி,<br>ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு,<br>ஏ. மல்லாபுரம் ஊராட்சி,<br>பாலக்கோடு வட்டாரம், தருமபுரி மாவட்டம்.<br>கைபேசி : 95784 30207 | பாக்கு மட்டை தட்டுகள் |  |
| திருமதி. மேனகா,<br>அச்சாரஹள்ளி பகுதி அளவிலான கூட்டமைப்பு<br>அச்சாரஹள்ளி ஊராட்சி,<br>பென்னாகரம் வட்டாரம், தருமபுரி மாவட்டம்.<br>கைபேசி : 95784 41399 | புளி |  |
| திருமதி. மீனா<br>அப்துல் கலாம் மகளிர் சுய உதவிக் குழு,<br>பத்திரஹள்ளி ஊராட்சி,<br>இறையூர் வட்டாரம், தருமபுரி மாவட்டம்.<br>கைபேசி : 73735 77222 | கருவாடு வகைகள் |  |
| திருமதி. சுதா,<br>ஜெயம் மகளிர் சுய உதவிக் குழு,<br>மொட்டன் குறிச்சி ஊராட்சி,<br>கடத்தூர் வட்டாரம், தருமபுரி மாவட்டம்.<br>கைபேசி : 86107 06623 | காளன் வகைகள் |  |



சமையல் குறிப்புகள்

# குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த பழசாதம்

இந்த கோடை விடுமுறையில் உங்கள் குழந்தைகளை குதுகலமாக்க சுவையான ஃப்ரூட் ரைஸ் செய்து கொடுங்கள். இதில் ஏராளமான சத்துக்களோடு, பார்க்க கலர்ஃபுல்லாக இருப்பதால் குழந்தைகள் இதை ரசித்து உண்பார்கள். இப்போது ஃப்ரூட் ரைஸ் எப்படி சமைக்கலாம் என்பதை பார்க்கலாம்!

**தேவையானவை:**

பாசுமதி அரிசி • ஒரு கப், நெய் • 4 டீஸ்பூன், பட்டை, கிராம்பு, ஏலக்காய் தலா • 2, பிரியாணி மசாலா ஒரு டீஸ்பூன், இஞ்சி பூண்டு பேஸ்ட் • ஒரு டீஸ்பூன், நறுக்கிய பைனாப்பிள், நறுக்கிய ஆப்பிள், திராட்சைப்பழம் (சேர்த்து) ஒரு கப், புதினா, கொத்தமல்லித்தழ • சிறிதளவு, மிளகாய்த்தூள் ஒரு டீஸ்பூன், உப்பு தேவைக்கேற்ப.

**செய்முறை:**

அரிசியை கால் மணி நேரம் ஊறவிட்டு வேக வைத்துக் கொள்ளவும். அடுப்பில் கெட்டியான பாத்திரத்தை வைத்து, அதில் நெய் விட்டு, காய்ந்ததும் பட்டை, கிராம்பு, ஏலக்காய் தாளித்து... புதினா, கொத்தமல்லித்தழை சேர்த்துக் கிளறவும். அதனுடன் இஞ்சி பூண்டு பேஸ்ட், பிரியாணி மசாலா, மிளகாய்த்தூள், உப்பு சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு நறுக்கிய பழங்களை சேர்த்து, சாதத்தையும் போட்டுக் கிளறி, அடுப்பை மிகவும் குறைந்த தீயில் வைத்து சிறிது நேரத்துக்குப் பிறகு இறக்கினால் சுவையான பழசாதம் ரெடி!!



# பயனுள்ள எளிய வீட்டுக் குறிப்புகள்

வீட்டில் நாம் அன்றாட வேலையை சுலபமாக்க கூடிய வகையில் சில நுணுக்கமான குறிப்புகளை தெரிந்து வைத்திருப்பது அவசியமாகும். இது சில அவசரமான சமயங்களில் நம் வேலையை சுலபமாக்க கூடும். மேலும் வீட்டு குறிப்புகள், சமையலறை குறிப்புகள், ஆரோக்கிய குறிப்புகள் என்று ஒவ்வொரு விஷயத்திலும் நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதை தேடி அலையத் தேவையில்லை. இந்த சிறு சிறு விஷயங்கள் மூலம் நேரத்தை அதிகமாக மிச்சப்படுத்தி கொள்ளலாம்.

அப்படியான எல்லோருக்கும் பயனுள்ள சில எளிய குறிப்புகள் என்னென்ன? என்பதை அறிய தொடர்ந்து இந்த பதிவை நோக்கி பயணிப்போம்.

திடீரென்று அதிகமாக வயிற்றில் வலி ஏற்படும் பொழுது நொடியில் வலி நீங்க இளநீர் வாங்கி வந்து அதில் ஒரு எலுமிச்சம் பழத்தின் சாற்றை பிழிந்து அப்படியே குடித்து விடுங்கள். உஷ்ணம் தணிந்து உஷ்ணத்தால் ஏற்படும் வயிறு வலி நீங்கிவிடும். அதிக உஷ்ணம் சில சமயங்களில் பல்வேறு நோய்களை உண்டாக்கிவிடும். எப்போதும் உடலை இயற்கையான முறையில் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

மீந்து போகும் பழைய சாதம் நீங்கள் சாப்பிடா விட்டாலும் பரவாயில்லை. சாதம் ஊறிய அந்த தண்ணீரில் இருக்கும் சத்துக்கள் அளவற்றவை, எனவே மீந்து போகும் சாதத்தில் தண்ணீரை ஊற்றி வைத்து விடுங்கள். மறுநாள் அதனை செடிகளுக்கு ஊற்றுவது செடிகளின் செழிப்பை மென்மேலும் வலுவாக்கும். மேலும் அந்த தண்ணீரை கொண்டு தலையை அலசுங்கள், இதனால் முடிகளின் கால்களுக்கு சத்துக்கள் கிடைத்து ஆரோக்கியத்துடனும், பளபளப்பாகவும் இருக்கும்.

எலுமிச்சை ஊறுகாய் தயாரிக்கும் பொழுது அதனுடன் கொஞ்சம் சர்க்கரை, மிளகாய்த்தூள், இந்துப்பு, 2 டீஸ்பூன் ஓமம் சேர்த்து நன்கு குலுக்கி பின்னர் வெயிலில் உலர வைத்து சாப்பிட, சுவையும் நன்றாக இருக்கும், ஆரோக்கியமும் பலப்படும்.

ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்களின் வெற்றிக் கதைகள்

# மகளிருக்கான பரிசு பெட்டகங்கள் தயாரிக்கும் மகளிர் குழு



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், எலவம்பட்டி கிராமத்தில் செல்லியம்மன் குழு கடந்த 2014 ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் 6 நபர்கள் இணைந்து கோரை புல் மூலம் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான தயாரிப்பு பயிற்சியில் கலந்து கொண்டோம்.

இத்தொழிலை மேற்கொள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.1,00,000/- மற்றும் வங்கி கடனாக ரூ.5,00,000/- பெற்று கோரை புற்களை கொண்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத கோரை பை, நகை பெட்டகம், புடவைப் பெட்டி, பரிசுப் பெட்டி மற்றும் டீ கப் விரிப்பு போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்வதன் வாயிலாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.9,000/- வரை மாத வருமானமாக கிடைக்கிறது. இந்தப் பொருட்களைத் தயாரிப்பதன் வாயிலாக குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரம் உயர்ந்து சுற்றுசுழலும் பாதுகாக்கப்படுகிறது. தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு செல்லியம்மன் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வாழ்வாதார இயக்கத்தால் வறுமை நீங்கியது

**தென்காசி மாவட்டம்**



தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அஷ்டலட்சுமி மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 12 பெண்கள் நெசவுத் தொழிலை மேற்கொண்டு வந்தனர். போதிய வருவாய் இல்லாத நிலையில் அனைவரின் குடும்பத்திலும் வறுமை நிலவி வந்தது. இந்த நிலையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் SEP-G திட்டத்தின் கீழ் வங்கிக் கடனாக ரூ. 6 இலட்சம் அஷ்டலட்சுமி மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு தங்களின் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை வாங்கி தற்போது நெசவுத் தொழிலை சிறப்பாக மேற்கொண்டு முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

தங்களுக்கு கடன் வழங்கி, தொழிலை சிறப்பாக மேற்கொள்ள உதவிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு அஷ்டலட்சுமி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இயக்கம் தந்த தன்னம்பிக்கை !

திருச்சிராப்பள்ளி மாவட்டம்



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருவளர்சோலை பகுதியில் வசித்து வரும் என் பெயர் அகிலா. எங்கள் பகுதியில் வசிக்கும் 12 பெண்கள் ஒன்று சேர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் NULM சூரியகாந்தி மகளிர் உதவிக் குழுவை ஆரம்பித்து, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளையில் சேமிப்பு கணக்கு தொடங்கி செயல்பட்டு வருகிறோம். எங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு மருத்துவ செலவு, படிப்பு செலவு என பல்வேறு செலவுகளுக்கு குழுவின் மூலம் உள்கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இக்குழுவில் உறுப்பினராக உள்ள நான், சுய தொழில் தொடங்க வங்கி கடனாக ரூ.30,000/-பெற்று பஞ்சகாவியம் என்னும் இயற்கை உரத்தினை தயாரித்து அதன் மூலம் வருவாய் பெற்று வருகிறேன். இந்த வருமானம் எனக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தியதுடன் சமூ கத்திலும் நன்மதிப்பை பெற்று தந்துள்ளது.

எங்கள் குழுவில் உறுப்பினர்களான கீதா என்பவர் சிறு பெட்டிக் கடையும், சுகன்யா என்பவர் விவசாயம் செய்தும், மலர்கொடி என்பவர் காய்கறி கடையும் வைத்து வருமானம் பெற்று வருகின்றனர்.

எங்கள் பகுதியில் செயல்படும் 9 மகளிர் சுய உதவிக் குழுக்களை இணைத்து பகுதி அளவிலான NULM திருவளர்சோலை ALF என்னும் குழுவையும் ஆரம்பித்து நடத்திக் கொண்டு வருகிறோம்.

எங்களுக்கு பல்வேறு வகையிலும் வழிகாட்டி, எங்களுக்கு கடன் உதவிகள் வழங்கி, சுய தொழில் முனைவோர்களாக மாற்றியுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் NULM சூரியகாந்தி மகளிர் உதவிக் குழு உறுப்பினர்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழு

விருதுநகர் மாவட்டம்




விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சியில் செயல்படும் புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழுவானது 2017ஆம் ஆண்டு 12 உறுப்பினர்களைக் கொண்டு துவக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்கள் குழுவாக இணைவதற்கு முன்னர், வீட்டு வேலை மற்றும் கீரை வியாபாரம் செய்து வந்தனர். குழு துவங்கிய பின்னர் சுயமாகத் தொழில் தொடங்கிட தீர்மானித்து, வங்கியில் நேரடிக் கடனாக ஒரு இலட்சம் ரூபாய் பெற்று அத்தொகையை மூலதனமானக் கொண்டு, அப்பளம் தயாரிக்கும் தொழிலை செய்யத் துவங்கினர். தொடர்ந்து இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையாக வங்கி நேரடி கடனாக ஆறு இலட்சம் ரூபாய் பெற்று, தங்களது தொழிலை மேம்படுத்தி உள்ளனர்.

இக்குழுவினர் தயாரிக்கும் அப்பளங்களை இராஜபாளையம் நகராட்சியில் உள்ள மளிகை கடைகளுக்கு விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாதந்தோறும் 6,000/-ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது. தற்போது புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களின் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளன. இவர்களின் குழந்தைகளும் கல்லூரி படிப்பு வரை படிக்க வைத்துள்ளனர். தற்பொழுது இக்குழுவானது 35,000/- ரூபாய் உள்கடன் கொடுக்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. தங்களின் வாழ்வாதாரம் உயர வழிவகுத்து தந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு புஷ்பவனம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இந்திய ஆட்சிப் பணிக்கான பயிற்சி நிறுவனத்தில்

## தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் மற்றும் வங்கி ஒருங்கிணைப்பாளர் ஆற்றிய உரை





இந்திய ஆட்சிப் பணி நிலை அரசு ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்துவரும் உத்தரகாண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாகப் பணி பயிற்சி நிறுவனத்தில், 2022 பேட்ச் 184 ஐ.ஏ.எஸ். மற்றும் ஆர்.பி.சி.எஸ். பயிற்சியாளர்களுக்கு முன்பாக, 10.03.2023 அன்று தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பகுதியில் செயல்படும் செம்பருத்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினரும், சமுதாய வங்கி உறுப்பினருமான செல்வி என்பவரும், சூரியகாந்தி மகளிர் சுய உதவிக் குழுவிவைச் சேர்ந்த வங்கி ஒருங்கிணைப்பாளர் (சகி) திலகவதி என்பவரும், தமிழ்நாட்டில் தனி நபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி செயல்பாடுகளான வங்கிக் கணக்கு திறப்பு, தரப்படுத்தல், பதிவேடுகள் மற்றும் கணக்கு பராமரிப்பு, கடன் இணைப்பு, CBRM, கடன் திருப்பிச் செலுத்துதல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், பணம் திரும்பப் பெறும் நடைமுறைகள், டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மற்றும் சைபர் அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்கொள்ளும் வழிமுறைகள் ஆகியவை குறித்தும், சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டு வரும் விழிப்புணர்வு குறித்தும் விவரித்தனர்.

மேலும், AEPS மூலம் பணம் எடுப்பது (24/7), டெபிட் கார்டு உபயோகித்து பணம் எடுப்பது, முதியோர் ஓய்வூதியம் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் வீடுகளுக்கேச் சென்று சேவை செய்வது, MGNREGS பணம் பட்டுவாடா, செலுத்துதல், பிற கணக்குகளுக்கு நிதி பரிமாற்றம், வைப்பு நிதி சேகரிப்பு, இரட்டை அங்கீகாரம், PMJJBY, PMSBY, APY இன் கீழ் பதிவு செய்தல், வாராக் கடன் வசூல், கோவிட், வெள்ளம் போன்ற இக்கட்டான காலங்களில் வங்கிச் சேவை அளித்தது போன்றவை குறித்து தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வியும், திலகவதியும் ஆற்றிய உரையை தமிழ்நாட்டைச் சேர்ந்த இரு இ.ஆ.ப., பயிற்சியாளர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். தமிழ்நாட்டின் சுய உதவிக் குழுவைச் சேர்ந்த மகளிர் ஆற்றிய உரையைக் கேட்ட, ஐ.ஏ.எஸ். மற்றும் ஆர்.பி.சி.எஸ். பயிற்சியாளர்கள் பலத்த கரவோலி எழுப்பி உற்சாகப்படுத்தியது, அவர்களின் சேவைகளுக்கு கிடைத்த ஒரு மாபெரும் அங்கீகாரம்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளரான செல்வியும், வங்கி ஒருங்கிணைப்பாளர் (சகி)-யான திலகவதியும், மாண்புமிகு உத்தரகாண்ட் மாநில ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) திரு. குர்மித் சிங்கைச் சந்தித்து விளக்கமளிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். மாண்புமிகு உத்தரகாண்ட் மாநில ஆளுநர் அவர்கள் BC சகியிடமிருந்து ஹநுஞுளு வாயிலாக ரூ.1001/-ஐ பெற்று, அந்தத் தொகையை BC சகியைச் சார்ந்துள்ள சூரியகாந்தி மகளிர் சுய உதவிக் குழுவிற்கே நன்கொடையாக அளித்தார்.

தமிழ்நாட்டினைச் சேர்ந்த கிராமப்புற பெண்கள், இந்திய ஆட்சிப்பணியாளர்களிடையே உரையாற்றி, அவர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக் குழு மகளிர் அனைவருக்கும் பெருமையை சேர்க்கும் நிகழ்வாகும்.







# "துப்பட்டாவை" தூக்கி வீசிய அரசு பள்ளி மாணவிகள்... "துப்பட்டா போடுங்க தோழி" நூல் ஆசிரியருக்கு வரவேற்பு




கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் மலையில் அமைந்துள்ள அரசு உண்டு உறைவிட பள்ளி மாணவிகளிடம் கலந்துரையாட சென்ற "துப்பட்டா போடுங்க தோழி" உள்ளிட்ட புத்தகங்களை எழுதிய எழுத்தாளர் கீதா இளங்கோவனுக்கு துப்பட்டாவை தூக்கி வீசி மாணவிகள் உற்சாக வரவேற்பு அளித்தது சமூக வலைதளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகிறது.

அரசு பள்ளி மாணவர்கள் கல்லூரி செல்லும்போது அவர்களை வழிநடத்துவதற்காக, அரசு பள்ளிகளின் முன்னாள் மாணவர்களை வைத்தே அறிவுறுத்தல்களை வழங்க தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை புதிய முயற்சியை மேற்கொண்டு இருக்கிறது. அந்த வகையில் அரசு பள்ளிகளில் பயின்று தற்போது பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை அழைத்து மாணவ மாணவிகள் மத்தியில் உரையாற்ற ஏற்பாடு செய்து இருக்கின்றனர்.

அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் மலை பகுதியில் அமைந்து உள்ள அரசு பழங்குடியின உண்டு உறைவிட பள்ளி மாணவிகளிடம் எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ் உரையாடினார். இதுகுறித்து பேஸ்புக்கில் அவர் வெளியிட்டு இருக்கும் வீடியோ நெகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இதனை பலரும் அதிகளவில் பகிர்ந்து வருகின்றனர்.

'துப்பட்டா போடுங்க தோழி' நூலில் அப்படி என்ன இருந்தது என்பது குறித்து நிவேதிதா கூறும்போது,

"கல்வராயன்மலை செல்லங்களிடம் உரையாடியபோது "துப்பட்டா போடுங்க தோழி" நூலைப் பற்றி அதிகம் பேசினார்கள். கற்பு, கருப்பை, காதல் என உடல் அரசியலை விரிவாகவே உரையாடினோம். 'துப்பட்டா போடுங்க தோழி' நூலின் ஆசிரியர் கீதா இளங்கோவன் இங்கு வரும்போது அவரை 'துப்பட்டாவை கழற்றி வீசி வரவேற்க முடியுமா?' என ஒரு கேள்வி கேட்டுவிட்டு வந்தேன். நான் சொல்லிவிட்டு திரும்பிய சில நிமிடங்களில் அவர்களுடன் வந்திருந்த பள்ளி ஆசிரியர் ஒருவர் 'துப்பட்டா சரியாக போடவில்லை' என ஒரு குழந்தையை திட்டிய செய்தி எனக்கு வந்தது.

'சரி இன்று எப்படி குழந்தைகள் வரவேற்றார்கள், நேற்று பேசியதன் பயன் இருந்ததா? என இரவு கேட்போம் என இருந்தேன். அதற்குள் அருள் ஜெகன் என்பவர் ஒரு காணொளியை பதிவிட்டு விட்டார்.

"என் வாழ்க்கையில் இது மிகவும் சக்திவாய்ந்த தருணமாக இருக்கும். நன்றி பெண்களே, நாம் சரியான பாதையில் செல்கிறோம். சம்பவத்துக்கு பிறகு குழந்தைகள் யாரும் துப்பட்டா போடவில்லை என்கிறார் ஜெகன்" என்று அவர் பதிவிட்டு இருக்கிறார்.

இது குறித்து அரசு பள்ளி ஆசிரியரும் செயல்பாட்டாளருமான மகாலட்சுமி தனது முகநூலில் பதிவிட்டு இருப்பதாவது, "துப்பட்டா போடுங்க தோழி" நூலின் ஆசிரியர் கீதா இளங்கோவன் அவர்களின் மாபெரும் வெற்றி இது! மாதவிடாய், துப்பட்டா போடுங்க தோழி ஆகிய இரண்டு நூல்களும் ஆசிரியர் கீதா இளங்கோவன் வாழ்க்கையில் மட்டுமல்ல ஒவ்வொரு பெண்ணிற்கும் மைல்கல். இந்த வீடியோவைப் பார்த்ததும் நெசமாவே செம ஏநை ஆகிட்டேன்." என்று பதிவிட்டு உள்ளார்.

பெண்ணுரிமை சார்ந்த படைப்புகளை தொடர்ந்து வழங்கி வரும் கீதா இளங்கோவன், பள்ளி மாணவிகளுடனான உரையாடலில் அவர்களுக்கான உரிமைகள், பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகிறார். தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறையின் இந்த திட்டம் சிறப்பான என அவர் பாராட்டி உள்ளார்.

https://tamil.oneindia.com/news/tamilnadu/students-throw-dupatta-to-give-warm-welcome-to-writer-geetha-ilangovan-502667.html என்ற இணைய தள முகவரியில் மேற்கண்ட நிகழ்வு குறித்த காணொலியை காணலாம்.

நன்றி... ஒன் இந்தியா இணையதளம்

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வெற்றிக் கதை

# காளான் வளர்ப்பு வளமானது! வணிக உயர்வு தரமானது!

*IoT தொழில்நுட்ப உதவியுடன் வளமடையும் காளான் தொழிற்குழுவினர்*



தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள குட்டுடங்காடு கிராமத்தில் ஒரு சிறப்பான தொழில் செழிப்பில் காளான் தொழிற்குழுவினர் நவீன முறையில் காளான் உற்பத்தி செய்து வருகின்றனர். இந்தத் தொழிற்குழு உறுப்பினர் பெண்மணி ஒருவர் பேசுகையில், "இந்த தொழிற்குழுவை நாங்கள் தொடங்குவதற்கு முன்பு, எங்கள் குழுவிலுள்ள மகளிர் குடும்பத் தலைவிகளாக, அவரவரது குடும்பத்தை நிர்வகித்து வந்தோம். ஆனாலும் எங்களுக்காக ஒரு தனி வருவாயை ஈட்ட வேண்டும் என்பது எங்களில் பலபேரின் கனவாக இருந்தது. அதற்காக பல முயற்சிகளை நாங்கள் எடுத்து வந்த நிலையில், தமிழ்நாடு அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்களுக்கு புதிய பாதையை வகுத்து தந்தது. எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் எங்களுக்கு காளான் உற்பத்திக்கான தொழிற் பயிற்சி வழங்க வழிகாட்டப்பட்டது." என்றார்.

மேலும் இதுகுறித்து குறிப்பிடுகையில் "இதற்காக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி (CSS) வழியாக, எங்களுக்கு காளான் வளர்ப்பு தொழிற் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் IoT தொழில்நுட்பத்துடன் நவீன முறையில் பால் காளான் மற்றும் சிப்பி காளான் வகைகளை வளர்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்குப் பிறகு நாங்கள் தொழிற்குழுவாக உருவாக்கப்பட்டு, எங்கள் குழுவிற்கு தொடக்க நிதியாக ரூ. 75,000/- வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. அந்த நிதியில் எங்கள் உற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருட்களை வாங்கி காளான் வகைகளை உற்பத்திச் செய்து வருகின்றோம்.

எங்கள் ஊருக்கு அருகாமையில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர்களே எங்களின் பெரிய வாடிக்கையாளர்களாக இருக்கின்றனர். அவர்கள் காளானை எப்படி சமைப்பது என்று எங்களிடம் விவரங்களைக் கேட்டுப் பெறுவர், அப்படியே அவர்கள் எங்களின் தொடர் வாடிக்கையாளர்களாகவும் மாறி விட்டனர். மேலும் நாங்கள் விளைவிக்கும் காளான்களை காய்கறி கடைகளில் வாரத்திற்கு 3 நாட்கள் கொண்டு சென்று தருகிறோம். எங்கள் தொழிற்குழுவில் உற்பத்திச் செய்யும் காளான் வகைகள் ஒரு கிலோ 500/- ரூபாய்க்கு விற்கிறோம், மொத்தமாக வாங்குபவர்களுக்கு ஒரு கிலோ 400/- ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். மீதமிருக்கும் காளான் பொருட்களை வீணாக்காமல், அவற்றை மூலிகைத் தோட்டங்களுக்கு மண்புழு உரம் உற்பத்தி செய்ய பயன்படுத்துகிறோம். உற்பத்திச் செய்யும் உரங்களை 100 கிராம் உரத்தை 50/- ரூபாய் விலைக்கு விற்கிறோம்.

தற்பொழுது எங்கள் கிராமத்தில் உள்ள மற்ற பெண்களும் தங்களுக்கு காளான் வளர்ப்பு குறித்த பயிற்சி வழங்கக் கேட்டுள்ளனர். வாடிக்கையாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு எங்களின் தொழிற்குழுவினர் காளான் உற்பத்தியை அதிகரிக்கவும், காளானில் மதிப்புக் கூட்டுப் பொருட்களைத் தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளனர். இதன் மூலம் நாங்கள் வீட்டில் இருந்தபடியே தொழில் வளத்தில் மேம்பட்டு வருகின்றோம். மேலும் நாங்கள் எங்கள் நிறுவன வளர்ச்சிக்காக புத்தகப் பராமரிப்பு மற்றும் விற்பனையாளர்களிடம் பேசி வணிகத்தை உயர்த்தும் செயல்பாட்டில் ஈடுபட்டு வருகிறோம். இதன் மூலமாக எங்களுக்கு தன்னம்பிக்கை உயர்ந்ததுடன் நாங்கள் கண்ட பொருளாதார மேம்பாட்டுக் கனவும் நிறுவன முறையில் மெய்ப்பட்டு வருகிறது!

# இனிக்கின்ற பாலும், இயற்கை உரமும், CFS பயிற்சியால் வளமாகிறது!



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் வட்டாரம், முடிகண்டநல்லூர் ஊராட்சியில் செயல்படும் விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தியாளர் குழுவின் உறுப்பினர் கூறுகையில், ‘எங்கள் கிராமத்தில் 30 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பால் உற்பத்தியாளர்களாக உள்ளனர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ‘தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஆதரவில் ‘விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தியாளர் குழுவினை’ தொடங்கி, கடந்த 3 ஆண்டுகளாக நடத்தி வருகிறோம். எங்கள் உற்பத்தியாளர் குழுவிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கோவிட் சிறப்பு நிதி ரூ. 1.5 இலட்சம் பெற்று, பசுமாடுகளை வாங்கி, பால் உற்பத்தி செய்து எங்கள் பண்ணையை வளமாக்கி வருகிறோம்.

எங்களின் பால் உற்பத்தியில் அடுத்த கட்ட தொழில் மேம்பாட்டிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து சமுதாயப் பண்ணைப் பள்ளியின் மூலம் பண்ணைப் பயிற்சி வழங்குமாறு கேட்டுக் கொண்டோம். எங்கள் கோரிக்கையின் அடிப்படையில் நாமக்கல்லில் உள்ள க்ருஷி விக்யான் கேந்த்ரா (KVK) மையத்தில், பால் பண்ணை மற்றும் நோய்த்தடுப்பு மேலாண்மையில் 5 வருடம் அனுபவம் வாய்ந்த ஸ்பார்க் (பயிற்றுநர்) செல்வி. துளசி பயிற்சி வழங்கினார்.

12 மாதங்கள் நடைபெற்ற இந்த பயிற்சியின் மூலம் நோய்களைக் கண்டறிதல், நோய்த்தடுப்பு மேலாண்மை, இயற்கை உரங்கள் உற்பத்தி, மாடு வளர்ப்பு நுட்பங்கள், மண்புழு உரம் மற்றும் பஞ்சகவ்யம் தயாரிப்பு போன்றவற்றை நாங்கள் கற்றுக் கொண்டோம். நாங்கள் பயின்ற அத்தனைப் பயிற்சிகளையும் நடைமுறைப்படுத்தி வருவதுடன், அவற்றின் மூலம் நல்ல வருவாயையும் ஈட்டி வருகிறோம். வருங்காலங்களில் எங்கள் உள்ளூர் சந்தைகளில் பால் மற்றும் மண்புழு உரங்களை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளோம். இவற்றுடன் பாலில் மதிப்புக் கூட்டுப் பொருட்களான தயிர், வெண்ணெய் போன்றவற்றை தயாரித்து விற்பனைச் செய்யவுள்ளோம்!

## இணை மானிய நிதியால் புத்துயிர்! புதிய படைப்பில் புத்தொளி!

என் பெயர் னு. பூவிழி (34 வயது), திருச்சி மாவட்டம், அந்தநல்லூர் வட்டாரத்தில், முத்தரசநல்லூர் ஊராட்சியில் வசிக்கும் நான் கடந்த 7 ஆண்டுகளாக ஒரு சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். 2021ஆம் முதல் ஆண்டு என் கணவருடன் இணைந்து இ-சேவை மையம் நடத்தி வந்தேன். இந்த மையத்தின் மூலமாக எனக்கு புதுப்பிக்கத்த ஆற்றல் தொழிற் பயிற்சியைப் பெற வாய்ப்பு கிடைத்தது. நான் அதில் பங்கேற்று மின்சாரத்தை சேமிக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலான LED பல்பு தயாரிப்பை கற்றுக் கொண்டேன். இந்தப் பயிற்சிக்குப் பிறகு தொழிலின் அடிப்படையில் தயாரித்த LED பல்புகளை CSC இ-சேவை மையத்தில் விற்பனை செய்து வருகின்றோம்.

இதற்கான பயிற்சியை கோயம்புத்தூரில் உள்ள ‘மாஸ்டர் பிரைட் எலக்ட்ரிக்கல்’ நிறுவனத்தில் எடுத்துக் கொண்டேன், LED பல்பு தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்க திட்டமிட்டேன். பிறகு சுய உதவிக் குழு வழியாக முத்தரசநல்லூரில் தொழில்சார் சமூக வல்லுநர் எனக்கு இணை மானிய நிதி குறித்து முழுமையாக MGP-யை பெறுவதற்கான தகுதி, ஆவணங்கள், விண்ணப்ப செயல்முறைகள் என அனைத்தையும் சொல்லிக்கொடுத்தார். அவருடைய வழிகாட்டுதலின்படி கடன் வேண்டி விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு நான்கு நிலை ஆய்வுக்குப் பிறகு நான், மூலதனத் தொகை வைத்திருந்த வங்கியின் மூலம் ரூ.5 இலட்சம் இணை மானிய நிதியைப் பெற்றேன். அந்த நிதியில் ஷ்ரீவர்மா என்டர்பிரைஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கி, இரண்டு பெண் ஊழியர்களுடன் டுநுனு பல்புகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றேன்.



வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எனது வளமான தொழிலுக்கு பெரிய உதவியை செய்ததுடன், தன்னம்பிக்கையுடன் சாதிக்க ஆதரவளித்து வருகிறது. என்னைப்போன்று வாழ்வில் சாதிக்க விரும்பும் பெண்களுக்கு இத்திட்டம் ஒளிவிளக்காகும்!

# இணை மானிய நிதியால்...
# தொழில் விரிவடைந்தது! வருவாய் உயர்வடைந்தது!




என் பெயர் அபிராமி (வயது 29), திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டாரத்தில் உள்ள கோணலூர் ஊராட்சியில் வசித்து வரும் நான் கடந்த 5 ஆண்டுகளாக எங்கள் பகுதியில் செயல்படும் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கின்றேன். 5 ஆண்டுகளுக்கு முன்பு திரு. தேவக்குமார் என்பவரை திருமணம் செய்து கொண்டேன், நாங்கள் இருவரும் பட்டதாரிகள் ஆகும்.

என் கணவர் கடந்த 7 ஆண்டுகளாக திருவண்ணாமலையில் கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்ட்டர் பழுது பார்க்கும் கடை வைத்துள்ளார். அருகிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கடைகளில் உள்ள கணினிகளைப் பழுது பார்த்து தருவார். எங்கள் கடையில் சொந்தமாக பிரிண்டர் மற்றும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வைத்து, பிரிண்ட் எடுத்தல் மற்றும் ஜெராக்ஸ் எடுக்க அவருக்கு உதவி செய்து வந்தேன். இதில் எங்களுக்கு மாத வருமானம் ரூ. 15,000/- முதல் ரூ.20,000/- வரை கிடைத்து வந்தது.

ஆனபோதும், எங்கள் குடும்பம் விரிவடைந்து வரும் நிலையில் எங்களுக்கு கிடைத்து வந்த வருமானம் போதுமானதாக இல்லை. எனவே எங்கள் தொழிலை விரிவுப்படுத்தி கணினி மற்றும் பிரிண்ட்டர்களை வாங்கி விற்க திட்டமிட்டோம். அதன்படி 2021ஆம் ஆண்டு நான் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழு மூலம் சிறு கடனுதவியும், என் தோழியிடமிருந்து கடன் அடிப்படையிலும் வட்டிக்கு கடன் வாங்கி, அந்த முதலீட்டில் இன்புட் மற்றும் அவுட்புட் டிவைஸ்களான மானிட்டர், பிரிண்டர் மற்றும் இதர துணை பாகங்களை வாங்கி விற்பனை செய்து வந்தோம்.

விற்பனை சூடுபிடித்த நிலையில், விற்பனையை கவனித்தல், பிரிண்ட் அவுட் எடுக்கும் பணி ஆகியவற்றை நானே நிர்வகித்து வந்தேன். ஆனால், வணிகத்தை விரிவாக்கிய நிலையிலும் எங்களுக்கு நிறுவனத்திலிருந்து லாபம் கிடைக்கவில்லை, வாங்கிய கடனை திரும்ப செலுத்த வேண்டிய நிலையில் இருந்தோம். வருவாய் சுமாராகவும் நிறுவனத்தை நடத்தியே ஆகவேண்டிய கட்டாயத்திலும் இருந்த நிலையில், கடந்த 2022 ஆம் ஆண்டு எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலமாக எங்களுக்கு ஒரு தகவல் அறிக்கை வந்தது. அதில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தொழில் முதலீட்டுக்கு கடனுதவிப் பெறலாம் என்று அறிவித்தனர்.

இரண்டு மூன்று முறை விசாரித்தப் பிறகு 2022 செப்டம்பர் மாதம் மகளிர் வாழ்வாதார சேவை மையத்தின் மூலம் எங்களுக்கு ஒரு தொழில் திட்டம் தயாரித்து கடனுதவிக்கு விண்ணப்பித்தோம். அதன் அடிப்படையில் பல்வேறு நிலை ஆய்விற்குப் பிறகு ரூ. 4,76,187/-க்கு வங்கியில் அனுமதி வழங்கப்பட்டது. இந்தத் தொகையில் ரூ. 1,50,375/- மானிய நிதியாகும். ஆக, மொத்தமாக இணை மானிய நிதியை கனரா வங்கியிலிருந்து 2022 அக்டோபர் மாதம் பெற்றோம்.

இந்தக் கடனுதவி எங்களின் தொழிலை சரியான முறையில் விரிவாக்க உதவியதுடன், வட்டி செலுத்தும் அழுத்தத்திலிருந்தும் காப்பாற்றியது. மேலும் எங்கள் தொழிலில் தற்பொழுது ஊஊகூஏ கேமராக்களை பொருத்துவதையும் இணைத்துக் கொண்டு, அக்கம்பக்கத்திலுள்ள பகுதிகளில் சேவையை வழங்கி வருகின்றோம். இவற்றின் மூலம் தற்பொழுது எல்லா செலவுகளும் போக மாதம் ரூ. 50,000/- வரை வருவாய் உயர்ந்துள்ளது. எனவே, தற்பொழுது எங்களின் தொழிலை எந்தக் கடனும் இல்லாமல் மேலாண்மை செய்யும் நல்ல நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றுடன் நிலையான வருவாயையும் எதிர்காலத்திற்கான சேமிப்பையும் செய்ய முடிகிறது.

எங்களின் தொழில் விரிவாக்கத் திட்டத்தை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் இணை மானிய நிதி ஆதரவின் மூலம் நிறைவேற்றியுள்ளோம்! மேலும் நாங்கள் எந்தக் கடனும், வட்டி குறித்தக் கவலையுமில்லாமல் வாழ்கின்றோம்.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின்
**ஆதரவை தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் சிறப்பாக செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் கீழ் செயல்படும் கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சிறந்த ஊராட்சியாக திகழ்கிறது. இவ்வூராட்சியில் 448 குடும்பங்கள், 5 குக்கிராமங்கள், 12 குடியிருப்பு மன்றங்கள் மற்றும் 253 மகளிர் உதவிக் குழுக்கள் செயல்படுகின்றன.

சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம் ரூ.15.22 இலட்சம் வட்டியில்லா கடனாக குறுந்தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இக்கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டு, 6 குறுந்தொழில்கள் தொடங்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பாட்டில் உள்ளது. மேலும் வழங்கப்பட்ட கடன் தொகையை முழுமையாக கூட்டமைப்பிற்கு கடன் திருப்பம் செய்யப்பட்டுள்ளது. 2575 பயனாளிகளுக்கு ரூ.1.92 கோடி மதிப்பில் துயர் குறைப்பு நிதிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.



மேலும் விதவைகள், மாற்றுத் திறனாளிகள், மிகவும் ஏழை குடும்பங்களுக்கு ரூ.1.41 கோடி தொழில் மேம்பாட்டு நிதியிலிருந்து உள்கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கடன் திருப்பமானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிதியில் வரவு வைக்கப்பட்டு சுழற்சி முறையில் மறுகடன் வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டமைப்பின் மூலம் நபார்டு, ஐ.சி.ஐ.சி.ஐ. மற்றும் இந்தியன் வங்கிகள் மூலம் தொழில்சார் கூட்டு பொறுப்புக் குழு கடன் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பாக ரூ.33.21 கோடி கடன் பெறப்பட்டு தவணை தவறாமல் கடன் திருப்பம் செலுத்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு உறுதுணையாக உள்ளமைக்காக இதுநாள் வரை ரூ.20.25 இலட்சம் ஊக்கத் தொகையாக கூட்டமைப்பிற்கு கிடைக்கப் பெற்று தூத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகம் மற்றும் நிதி ஆளுமை போன்றவற்றில் சிறந்த விளங்குவதற்கு தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு வழிநடத்துதலே காரணம் என கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கூறினர்.

# வருமானம் பெருக்கும் நடவடிக்கை மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளி



என்னுடைய பெயர் குப்பம்மாள், நான் செங்கல்பட்டு மாவட்டம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் முன்பு கீற்று முடைய கூலி வேலைக்கு சென்று வந்தேன். எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வருமானத்தை பெருக்கும் திட்டத்தின் கீழ் ரூ.20000/- கடன் பெற்று இட்லி கடை வைத்து நல்ல வருமானம் ஈட்டி வருகிறேன். இந்த வருமானத்தை கொண்டு குடும்பத்தை நடத்தி வருவதுடன், என் குழந்தைகளின் கல்வி செலவையும் செய்து வருகிறேன்.

இத்தொழில் மூலம் முன்பு இருந்ததை விட தற்போது எனது வாழ்க்கை தரம் உயர்ந்தமைக்கு காரணமான தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

\- குப்பம்மாள்

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd.; New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (1,25,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.



TNULM

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக்குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th April 2023 Posted at Patrika Channel, Egmore

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான
**வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்**
**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான**
**திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெற**

வாழ்வாதார உதவி அழைப்பு எண்
**155 330**
**LIVELIHOOD HELPLINE NUMBER**



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com